

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக 100 பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு விழா2026 நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பங்கேற்று விழா சிறப்புரையாற்றி வளகாப்பு சீர்வரிசைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேயர் உதயகுமார், ஆவடி மாநகர ஆணையர் சரண்யா, தலைமை செயற்குழு உறுப்பினர் ரமேஷ், ஆவடி துணை மேயர் சூரியகுமார், நாராயண பிரசாத், ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், வினோத், சமூக நலத்துறை அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் பேரூராட்சியில் வெல்லும் தமிழ் பெண்கள் மகளிர் தேர்தல் பரப்புரையை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ. துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர். என் எஸ். பாரிவள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர். பொன் சசிகுமார், துணை தலைவர் இளமதி கோவிந்தராஜ் உள்ளிட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## 5 சட்டமன்றத் தொகுதிகளில் - (21.02.2026)

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை!

## கழக வெற்றிக்கு - மக்கள் திரள் ஆதரவு!















தமிழ்நாட்டுப் பெண்கள் மனதில் அசைக்கமுடியாத நம்பிக்கையையும், ஆதரவையும் பெற்றுள்ளார் முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கும் விதமாகவும், ஒன்றிய பா.ஜ.க.வும், அதன் அடிமைக் கூட்டணியும் தமிழ்நாட்டுக்கு செய்து வரும் துரோகத்தை மக்கள் முன் எடுத்துரைக்கும் விதமாகவும் கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முழுக்க தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக்கூட்டமானது நடைபெற்று வருகிறது.

21.02.2026 அன்று தமிழ்நாடு தலைகுனியாது பொதுக்கூட்டமானது 5 சட்டமன்றத் தொகுதிகளில் எழுச்சியோடு நடைபெற்றது.

வில்லிவாக்கத்தில் திருமதி.கனிமொழி சோமு, சைதாப்பேட்டையில் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், போளூரில் கடலூர் புகழேந்தி, திருவெறும்பூரில் திண்டுக்கல் ஐ.லியோனி, பாபநாசத்தில் திருச்சி சிவா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

திருச்சி சிவா அவர்கள் பேசும்போது.. “ஒரே மொழி, ஒரே மதம்” என இந்தி மற்றும் குறிப்பிட்ட சித்தாந்தங்களைத் திணிக்க முயலும் சக்திகளிடமிருந்து, சிறுபான்மையினரின் உரிமைகளையும் நமது தாய்மொழியாம் தமிழையும் தி.மு.க. பாதுகாத்து வருகிறது பணி...என்றும், கடந்த ஆட்சிக்காலங்களில் கோரிக்கை வைத்தும் கிடைக்காத திட்டங்கள் பல உண்டு. ஆனால் இன்று, முதல்வர் அவர்கள் மக்கள் கேட்காமலேயே, அவர்களின் தேவைகளை அறிந்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். மக்களுக்கான அரசாகவும், மக்கள் விரும்பும் அரசாகவும் திராவிட மாடல் அரசு உள்ளது என மக்கள் முன் எடுத்துரைத்தார்.

தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் “கல்வியில் இந்தியாவிலேயே சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு இருப்பதை சுட்டி காட்டியவர், தமிழ்நாடு மருத்துவத் துறையில் கொண்டு வந்த பல்வேறு திட்டங்களைப் பற்றி எடுத்து உரைத்தார். அதோடு திருவள்ளுவர், பாரதியார் ஆகியோர்களை தேர்தல் நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்திக் கொள்ளும் ஒன்றிய பா.ஜ.க. அரசு பட்ஜெட்டில் ஒரு ரூபாய் கூட நமக்கு ஒதுக்காமல் ஓரங்கட்டியதோடு, நூறு நாள் வேலை திட்டத்தையும் முடக்கி தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது என பா.ஜ.க., அ.தி.மு.க.வின் இரட்டை வேடத்தை வெளிச்சம் போட்டு காட்டினார்.

திண்டுக்கல் லியோனி அவர்கள் அவருக்கே உரித்தான நகைச்சுவை பாணியில் .. “பழனிச்சாமியை TTV “அமைதிப்படை அமாவாசை” என்றார் . TTV யை “420” என்றார் பழனிசாமி. ஆகவே இது தேசிய ஜனநாயக கூட்டணி இல்லை இது தேசிய துரோகிகளின் கூட்டணி. “ என பேசியது மக்களை பெரிதும் கவர்ந்தது. அதோடு நமது பிரதமர் பிஹார் சென்று தமிழர்களை திருடர்கள் என்று சொல்வார், தமிழ்நாட்டிற்கு வந்து திருக்குறள் கூறுவார். இந்த ஏமாற்று வித்தையை எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் என்றும் நம்ப மாட்டார்கள் “ என பேசி முடித்தார்.

தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை மக்களிடையே மாபெரும் வரவேற்பை பெற்று வருகிறது. முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய பா.ஜ.க., அ.தி.மு.க. சதியை முறியடித்து மக்களுக்கு கொடுத்த ரூ.5000 மற்றும் உரிமைத் தொகை 2000 ஆக உயர்த்தப்படும் என்ற உறுதி மொழி ஆகியவை மக்கள் மனதில் குறிப்பாக தமிழ்நாட்டு பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று உள்ளது.

## திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில்

# “தமிழ்நாடு தலைகுனியாது” தேர்தல் பரப்புரை கூட்டங்கள்!

### மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



திருப்பூர், பிப். 24-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் தமிழ்நாட்டின் நிதி- மொழி- அரசியல் உரிமைகளைச் சிதைத்து அடிமைப்படுத்த துடிக்கும் டெல்லி அணிக்கு எதிராக தமிழ்நாடு தலைகுனியாது தேர்தல் பரப்புரை கூட்டம் 24.02.2026 செவ்வாய் கிழமை இன்று தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குண்டடம், எரகாம்பட்டியில், 25.02.2026 புதன்கிழமை அன்று காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குண்டடம், ஊதியூரில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் ஆகிய எனது தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக துணைப்பொதுச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், கழக துணைப் பொது செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், கழக மகளிரணி துணைச் செயலாளர், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், கழக இளைஞரணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதுசமயம், திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழ உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், இந்நாள்-முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிள், இந்நாள்-முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், இந்நாள்-முன்னாள் கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி குழு ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள், மற்றும் பொது மக்கள் பெரும் அளவில் கலந்துக்கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 7.50 கோடி செலவில், இராயபுரம் சட்டமன்ற தொகுதி மக்களின் முக்கியத் தேவையாக இருந்துவரும் சமுதாய கூடத்தை, சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி நேரில் கள ஆய்வு மேற்கொண்டார். மேற்கு பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்டச் செயலாளர்கள் புகழேந்தி, கௌரிஸ்வரன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில்

# புதிய திருமண மண்டபம் - அண்ணல் அம்பேத்கர் புதிய வெண்கலச் சிலை!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்! என். சந்திரன் எம்.சி. அறிக்கை!

சென்னை, பிப்.24-

ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் - மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இன்று 24.02.2026 நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4:00 மணியளவில் ஆலந்தூர் புது தெருவில் புதியதாக கட்டப்பட்டுள்ள திருமண மண்டபம், அதை தொடர்ந்து மாலை 5:00 மணியளவிள் ஆதம்பாக்கம் அம்பேத்கர் திடலில் புதியதாக அமைக்கபட்டுள்ள சட்ட மேதை டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் புதிய வெண்கல சிலையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கவும் விடுதலை சிறுத்தைகளின் தலைவர் பாராளுமன் உறுப்பினர் தொல்.திருமாவளவன் பெயர் கல்வெட்டை திறந்து வைக்கிறார்.

இந்த அமைச்சர்சள் தா.மோ. அன்பரசன் சேகர் பாபு, கழக பொருளாளர் டி. ஆர்.பாலு, கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிக்குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அனைத்து அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள்,பகுதி, வட்ட,பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், பாகமுகவர்கள், மூத்த கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள்,நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் - மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இளைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக,கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஏற்பாட்டில் மாபெரும் கிரிக்கெட் போட்டியை திரைப்பட நடிகர் விஷ்ணு விஷால், திரைப்பட நடிகை திருமதி.விஜயலட்சுமி, உறுப்பினர் எம்.கே.மோகன்,சென்னைப் பெருநகர மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் தெற்குப் பகுதிச் செயலாளர் ந. இராமலிங்கம் எம்.சி., வடக்குப் பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், கலந்து கொண்டு பரிசினை வழங்கினர். மேலும் இந்நிகழ்வில் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் ஏ.வி.ஆர் கோபால் ராம்,வட்டக் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.